<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.</u>

<u>**OS.No.**79/2021</u>

**Date:**10.10.2023 **PW.1**(அப்துல்காதர்)

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டார்).

<u>**பிரதிவாதி தரப்பு கு.வி தொடர்ச்சி:**</u>

நான் தாக்கல் செய்துள்ள வில்லங்கச் சான்றிதழ் 15.11.2022-ல் பெறப்பட்டது என்றால் சரிதான். எனது குறுக்கு விசாரணை முடிந்த பிறகு தான் இந்த வில்லங்கச் சான்றிதழ் நகலைப் பெற்றேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் போடுவதற்கு முன்பு நான் வில்லங்கச் சான்றிதழ் போட்டுப் பார்க்கவில்லை என்றால் வில்லங்கம் பார்த்துதான் சொத்து வாங்கினேன். எந்தத் தேதியில் வில்லங்கம் பார்த்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. என்னுடைய பிராதிலும், அறிவிப்பிலும் வில்லங்கம் பார்த்த தேதியைச் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வங்கி பரிவர்த்தனை ஆவணம் வா.சா.ஆ.4-ல் நகைக்கடனாக ரூ.4 லட்சம் வாங்கியதற்கான பதிவு இல்லை என்றால் சரிதான். இந்த ஆவணப்படி ரூ.2,99,000/- மட்டுமே 3 வருடத்தில் மொத்த பரிவர்ததனை நடந்துள்ளது என்றும், ரூ.10 லட்சத்தை கொடுப்பதற்கான நிதி ஆதாரம் எனக்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தில் வா.சா.ஆ.6 அசல் கிரைய ஆவணத்தை என்னிடம் கொடுத்ததாக வாசகம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 கிரைய ஆவணம் எனக்கு எப்போது, எப்படி கிடைத்தது என்ற விவரத்தை பிராதிலும், அறிவிப்பிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 வங்கி கணக்கு நகலுடன் 65 பி சான்றிதழ் இணைக்கப்படவில்லை என்பதால், அந்த ஆவணம் ஏற்கத்தகுந்ததல்ல என்றால் சரியல்ல. அஜ்மீர் களஞ்சியத்திடம் கடன் வாங்கும்போது பிரதிவாதி வா.சா.ஆ.6 அசல் கிரைய ஆவணத்தினை கொடுத்திருந்தார் என்றும், நான் அதை அஜ்மீர்

களஞ்சியத்திடமிருந்து வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கடன் வாங்கும்போது தான் அசல் ஆவணத்தை கொடுப்பார்கள் என்றும், கிரைய ஒப்பந்தம் போடும்போது அசல் ஆவணத்தை ஒப்படைக்க மாட்டார்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.